**சுருக்கம்**

திட்டங்கள் – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2010–2011–ல் செயல்படுத்த அரசு மான்யம் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு – முதல் காலாண்டு தவணையாக ரூ.6.25 கோடி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை(நிலை) எண். 109** **நாள்: 08.6.2010**

**வைகாசி 25, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 06.07.2007.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.5060/ 2010 / உ3 நாள் 24.04.2010.

*****

**ஆணை:**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2007–2008 முதல் 2010–2011 வரையிலான நான்காண்டு காலத்தில் 561 பேரூராட்சிகளில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தவும், இத்திட்டத்திற்கு அரசு மான்யமாக ஆண்டிற்கு ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில் 2010–2011ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (B.E) ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர், 2010–2011–ஆம் ஆண்டில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டிய 141 பேரூராட்சிகளில் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஓவேலி பேரூராட்சி, கூடலூர் ஜென்மம் நிலங்களில் பிரிவு 17–ன் கீழ் வருவதால், இங்கு நில தீர்வை செய்யப்படவில்லை எனவும், மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் மத்திய குழுவின் ஆணையின்படி இங்கு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படாததால் இத்திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை என்றும், மீதமுள்ள 140 பேரூராட்சிகளிலும், இத்திட்டத்தினை செயல்படுத்த விதிமுறைகளின்படி பணிகளை தேர்வு செய்து, மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவின் அங்கீகாரம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதியினைப் பெற்று பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்க அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதியை பெற்று பணிகளைத் துவக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும், 2010–2011 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கான அரசு மான்யத் தொகையான ரூ.25.00 கோடியில் 50% தொகையான ரூ.12.50 கோடியை விடுவித்து ஆணை வெளியிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பேரூராட்சிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்த நடப்பு (2010–2011)

நிதியாண்டிற்கான அரசு மானிய ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.25.00 கோடியில் முதல் காலாண்டிற்கான தவணைத் தொகை ரூ.6.25 கோடி (ரூபாய் ஆறு கோடியே இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) விடுவித்து ஆணையிடுகிறது. மேற்காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

**1. ரூபாய் 1,25,00,000/–**

4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – JC சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–16, பெரும் பணிகள் ( 4515 00 789 JC 1604)

**2. ரூபாய் 5,00,00,000/–**

4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 800 ஏனைய செலவு – JR அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் –16, பெரும் பணிகள் ( 4515 00 800 JR 1608)

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு அறிக்கை ஒன்றினை பேரூராட்சிகளின் இயக்குநர் அரசிற்கு அனுப்ப வேண்டும்.

6. இவ்வாணை, நிதித் துறையின் அ.சா.எண். 27652/ந.நி.(ம)கு.வ/ 2010, நாள் 01.6.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்:–**

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
ஆணையாளர், கரூவூல கணக்கு, சென்னை – 35.
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.

**நகல்:–**

முதன்மைச் செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை–9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
நிதி (ந.நி (ம) கு.வ/ நிகுIV/ வழிவகை 1) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.